1975 அக்டோபர் 24]

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இந்த வறட்சிப் பணியில் குடி தண்ணீருக்காகவும், விவசாயத்திற்காகவும் கிணறுகளை ஆழப்படுத்துவது, புதிய கிணறுகளைத் தோண்டுவது ஆகிய இந்தக் காரியங்களைச் செய்திருக்கிறார்களே, இப்பேர்ப்பட்ட இடங்களில் அவைகள் தூர்ந்து போகாமல் இருக்கவும், அவைகள் மக்களுக்கு உபயோகப்படவும், அவைகளை எனர்ஜைஸ் பண்ணவுமான ஏற்பாடுகள் உண்டா? சில இடங்களில்தானே செய்திருக்கிறார்கள். இந்த மாதிரியாக மாவட்ட வாரியாகச் செய்வதற்கு குறிப்பு உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இது வருவாய்த்துறை அமைச்சரவர்களைக் கேட்கவேண்டிய கேள்வி.

THIRU B. VENKATASWAMY: In the drought-affected areas, people are suffering a lot because of the drought conditions. May I know from the Hon. Minister—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு குறிப்பிட்ட இடத்தில் எத்தனை கிணறுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்று கேள்வி கேட்கப்பட்டுள்ளது. இப்படிக் கேட்டால் எப்படி?

THIRU B. VENKATASWAMY: Regarding drought only I am asking.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டிரெளட்டைப்பற்றி என்ன. . .

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister whether any special treatment will be given to the drought-affected areas in energising pumpsets?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இப்போது வறட்சி பகுதி இல்லை. ஆகவே இந்தப் பிரச்சனை எழவில்லை.

மாவட்டங்களுக்கிடையிலான பேருந்துகளில் நின்று செல்லும் பயணிகள்

* 39 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டங்களுக்கிடையே ஓடும் பேருந்துகளில் நின்று கொண்டு செல்லும் பயணிகள் அனுமதிக்கப்பட்டார்களா?

(இ) ஆம் எனில், தற்போது நிறுத்தப்பட்டதற்கான **காரணங்கள் யாவை ?**

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) பேருந்து உரிமையாளர்கள் சிலர் தாக்கல் செய்த ரிட் மனுக்களை விசாரித்த உயர்நீதி மன்றம் பேருந்துகளில் நின்று கொண்டு பயணம் செய்யும் பயணிகளை ஏற்றிச் செல்லும்பொருட்டு, பேருந்து உரிமையாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி குறித்த நிபந்தனையை மாற்றுவதற்கு விண்ணப்பம் செய்ய வேண்டுமென அவர்களைக் கட்டாயப்படுத்துவதற்கு வட்டாரப் போக்குவரத்து அதிகார மன்றத்திற்கு எவ்வித அதிகார வரம்பும் இல்லையென்று தீர்ப்பளித்தது. இதனையொட்டியும் வரி விதங்கள் உயர்ந்துள்ளதை யொட்டியும், நிற்கும் பயணிகளை ஏற்றிச் செல்லு வதற்கான ஆணை ரத்து செய்யப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அரசுப் பேருந்துகளில், தற்போதெல்லாம் மிக அதிகமாக இடம் கிடைக்காத காரணத் தினால், 4, 5 மாதங்களாக மறுபடியும் ஆம்னி பஸ்களும், ஒப்பந்த ஊர்திகளும் அதிகமாகப் பயணிகளை ஏற்றுவதைப் பார்க்க முடிகிறது. எனவே, மாவட்டங்களைக் கடந்து நீண்ட தூரம் செல்லகூடிய அரசாங்க விரைவு வண்டிகளில் மாடிப் பேருந்துகளை விடுவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, மாடிப் பேருந்துகளை சென்னை நகரம் போன்ற இடங்களில் வேண்டுமானால் விடலாமே தவிர, நெடுந்தூரப் பயணத்திற்கு அது சரியாக இருக்குமா என்பது சந்தேகத்திற்குரிய விவகாரம். நெடுந்தூரப் பயணப் பேருந்துகள் செல்லும் வழி நெடுக மரங்களிருக்கின்றன. அந்த மரங்களை வெட்டிவிட்டு, மாடி பஸ்களை விடுவது கடினமான காரியம். சென்னையிலே மாடி பஸ்களை விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, தற்போது தயாராக இருக்கின்றன. விரைவிலே அவை நகர மக்களுக்குப் பயன்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, கிராமப் பகுதிகளிலே கடைசி பஸ்களுக்காக இரவு நேரங்களிலே காத்துக் கொண்டிருக்கிற பிரயாணிகள் பாதுகாப்பற்ற நிலையிலே இருக்கிறார்கள். அப்படி வருகின்ற பஸ்கள், இடமில்லாத காரணத்தால் அவர்களை ஏற்றாமல் சென்றுவிடுமானால்,

1975 அக்டோபர் 24]

அப்பிரயாணிகள் அந்த இடத்திலேயே இரவைக் கழிக்கவேண்டியிருக்கிறது. அல்லது தூரத்திலுள்ள கிராமங்களுக்கு நடந்து செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆகவே, இரவு நேரங்களிலே நின்று செல்ல பிரயாணிகள் தயாராக இருப்பின், அவர்களை ஏற்றிச்செல்ல வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பிக்க அரசு முன்வருமா? அதன்மூலம் பயணிகள் பயன்படுவார்கள் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இரவு நேரங்களில், எக்ஸ்பிரஸ் பஸ்கள்தான் போய்க்கொண்டிருக்கின்றன. ஆகவே, அப்பொழுது நின்றுகொண்டு போவது என்பது இயற்கையாகவே கொஞ்சம் கடினமான காரியம். அந்த முறைகளெல்லாம் முயற்சி செய்யப்பட்டு சரிவர இல்லை என்றுதான் இந்தத் திட்டம் வந்திருக்கிறது, ஹைகோர்ட் தீர்ப்பும் இருக்கிறது. ஆகவே, விதிவிலக்கு அளிப்பது தற்பொழுது கடினம் என்று நான் நம்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சபாநாயகர் அவர்களே, தற்பொழுது எப்படி இன்டர்-ஸ்டேட் பஸ்களில் ஸ்டான்டிங் பாசஞ்சர்கள் கூடாது என்று சொல்கிறார்களோ, அதைப்போல் இல்லாமல், டவுனிலே ஓடுகிற பஸ்களில் எக்கச்சக்கமான ஓவர்லோடு ஏற்றுகிறார்கள். அதுவும் இன்சன்டிவ் போனஸ் ஸ்கீம் வந்த பிறகு, மிக அதிகமாக ஏற்றுகிறார்கள். உள்ளே இடமில்லாதவர்கள், கடைசியிலே ஃபுட் போர்டிலே தொங்குகிறார்கள். அவர்கள் நடுவழியில் இறக்கப்பட்டு, ஃபைன் கட்டு என்று சொல்லப்படுகிறார்கள். ஆகவே, தனியார் பஸ்களில் ஓவர்லோடு ஏற்றக் கூடாது என்று எப்படி சட்டம் இருக்கிறதோ, அதேபோல், அரசாங்கம் ஓட்டுகின்ற பஸ்களுக்கும் அதனை அமுல்படுத்துமா? அரசாங்க பஸ்களிலும் ஸ்டான்டிங் பாசஞ்சர்களை அரசு அபாலிஷ் பண்ணுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நகரங்களிலே ஸ்டான்டிங் பாசஞ்சர்ஸ் அனுமதிக்கப்படுகிறார்கள். பீக் அவர்ஸில்—முக்கியமான அலுவல் நேரத்தில்தான் கூட்டம் அதிகமாக இருக்கிறது. மற்ற நேரங்களில், அப்படிப்பட்ட நெரிசலில்லை. தற்பொழுதுள்ள நெரிசலைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடுகளைக் குறிப்பிட்ட போக்குவரத்துக் கழகங்கள் மேற்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.